செ.வெ.எண் : 26/ஏப்ரல் நாள்:24.04.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**வேளாண்மை விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் தொடர்பாக வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில், நெல் 1,25,385 ஹெக்டேர், சிறுதானிய பயிர்கள் 11,256 ஹெக்டேர் பயறு வகைகள் 4,500 ஹெக்டேர் எண்ணெய்வித்து பயிர்கள் 3,500 ஹெக்டேர், தோட்டக்கலை பயிர்களான மிளகாய் 16,200 ஹெக்டேர், பருத்தி 4,000 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டது. இவற்றில் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணைவித்து பயிர்கள் முழுவதுமாக அறுவடை முடிவுற்றது. நெல் சாகுபடி செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து 22 நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலமாக 6,095 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது.

புரட்டாசி மற்றும் ஐப்பசி மாதங்களில் சாகுபடி செய்யப்பட்ட பருத்தி மற்றும் மிளகாய் பயிர்களில் இருந்து பருத்தி மற்றும் மிளகாய் வற்றல் தற்சமயம் சந்தைப்படுத்தும் பணி நடைபெற்று கொண்டு இருக்கிறது. விவசாயிகள் தங்கள் விளைப் பொருட்களைஅருகில் உள்ளதனியார் கொள்முதல் நிலையங்களில் விற்பனைசெய்து வருகின்றனர். விவசாயிகள் தங்கள் வேளாண் விளைப் பொருட்களை கிராமங்களில் இருந்து விற்பனைக்கு எவ்வித தடங்களும் இன்றி எடுத்துசெல்வதற்கு வாகனங்களுக்கு அனுமதிசீட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர,வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலமாக இராம்நாடு முண்டுமிளகாய் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் வைகை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு COVID-19 கொரோனா பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.6 இலட்சம் சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த சுழல்நிதியினை பயன்படுத்தி விவசாயிகளிடமிருந்து பருத்தி மற்றும் மிளகாய் வற்றல் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதுபோன்று கமுதியில் செயல்பட்டு வரும் இராமநாதபுரம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சிறுதானியம் மற்றும் பயறு வகைகள் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கிவரும் தனியார் கொள்முதல் விற்பனை நிலையங்கள் மூலமாக நெல் 428 மெட்ரிக் டன், மிளகாய் 623 மெட்ரிக் டன் மற்றும் பருத்தி 242 மெட்ரிக் டன் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் தொடர்பாக வேளாண்மை வணிகத்துறையில் வேளாண்மை அலுவலர்களின் தொலைபேசிஎண்கள்: 9566943421, 9944503489 தொடர்பு கொள்ளலாம்.

பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய காய்கறி மற்றும் பழங்கள் தோட்டக்கலைத்துறை மற்றும் உள்ளாட்சித்துறையின் மூலமாக ஒருங்கிணைந்து பொதுமக்களுக்கு எவ்வித தட்டுப்பாடுமின்றி கிடைத்திட உரியநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தோட்டக்கலை விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் தொடர்பான பிரச்சனைகளுக்கு சம்மந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ளலாம். விவசாயிகளின் நலன் கருதி நடமாடும் உர விற்பனைநிலையம் செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**